Y-M-CA

## இராணுவ கோப்ரலுக்கு தெற்கில் கத்திக்குத்து

ஸ்ரீலங்கா இராணுவத்தின் கோப்ரல் பதவியைச் சேர்ந்த ஒருவர் தென்னிலங்கையில் மாவரல பகுதியில் வைத்து கத்தியால் குத்திக் கொலை செய்யப்பட்டுள்ளார். பதினைந்தாவது கெமுனுபடைப்பிரிவைச் சேர்ந்த டபிள்யூ. என் நிகால் என்ற இராணுவ அதிகாரியே இவ்வாறு கொலை செய்யப்பட்டவராவார். பத்தேமை வாசியான இவர் தனது நண்பர் —04 ஆம் பக்கம் பார்க்க

★ பி. பி. ஸி செய்தியாளர்

## அரசுமீதுசிங்களக்கிராமவாசிகள் அதிருப்தி கொண்டுள்ளனர்

வடகிழக்கு மாகாணங்களின் எல்லையையொட்டியிருக்கும் சிங்களக் கிராமங்கள் அடிக்கடி தாக்கப்படுவதனால் அக்கிராமவாசிகள் அரசு மீது அதிருப்தி கொண்டுள்ளதாக பி பி ஸி செய்தியாளர் தெரிவித்துள்ளார். அண்மையில் — 04 ஆம் பக்கம் பார்க்க

★ ஜே. ஆரின் மகன் சொல்கிறார்

## கைப்பற்றிய பகுதிகளை படையினர்வைத்திருக்கமுடியாது

வடமராட்சியில் இடம்பெற்ற ''லிபரேசன் ஒப்பரேசனின்'' குறிக்கோள் வடமராட்சியை அரசின் கட்டுப்பாட்டினுள் கொண்டு வருவதே. ஆனால் வடமராட்சியை நீண்ட நாட்களுக்குத் தங்கள் வசம் வைத்திருக்கும் சக்தி அரச படையினரிடம் இல்லை ...04 ஆம் பக்கம் பார்க்க

பக்கங்கள் நான்கு விலை ரூபா:- 4 - 50

# முரசொலி

முரசு 05 ஒலி 150 பிரசோற்பத்தி சித்திரை 14 (27-04-1991) சனி

### கப்பல்துறை அமைச்சு செயலராக நியமனம்

முன்னாள் யாழ் அரச அதிபர் அன்ரன் அல்பிரட் கடந்த புதன்கிழமை முதல் துறைமுகங்கள் கப்பல் துறை இராஜாங்க அமைச்சின் செயலராக நியமிக்கப்பட்டுள்ளார் என கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

### மருத்துவப் புத்தகம்

வியாபாரி மூலை விநாயகர் தரும நிதிய நிறுவனரின் ...04 ஆம் பக்கம் பார்க்க

## மந்திகை ஆஸ்பத்திரியில் திருட்டு சிற்றூழியருக்கு அபராதம்

மந்திகை அரசினர் வைத்திய சாலையில் முருங்கைக்காய் திருடிய வைத்திய சாலை சுத்திகரிப்பு தொழிலாளியொருவருக்கு 25 ரூபா அபராதம் விதிக்கப்பட்டது. மந்திகை வைத்திய சாலைப்பகுதியில் சிறு திருட்டுக்கள் அதிகரித்துவருவதனால் இங்கு சிகிச்சை பெறும் நோயாளர்கள் பலத்த கஷ்டங்களை அனுபவித்துவருவதாக வைத்திய சாலை நிர்வாகத்திற்குப் பலத்த புகார்கள் செய்யப்பட்டிருந்தன. இதனையடுத்துகண்காணிப்புநடவடிக்கைகள்மேற்கொள்ளப்பட்டபோதே இத்திருடர் பிடிபட்டார் மாவட்ட வைத்தியஅதிகாரி டாக்டர் — 04 ஆம் பக்கம் பார்க்க

# தமிழர் ஆயுதம் ஏந்த காரணம் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியே

### மணற்பிட்டியில் இளைமர் தாக்கு

மட்டக்களப்பு மாவட்டம் மணற்பிட்டி முகாமிலிருந்து கொக்கட்டிச்சோலைக்குச் சென்ற படையினர் மீது விடுதலைப்புலிகள் இளைமர் தாக்குதலை மேற்கொண்டனர் இராணுவ தரப்பு சேதவிவரம் தெரியவரவில்லை 71

## தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் ஜனாதிபதி

'தற்போது இடம்பெற்று வரும் இனப்பிரச்சனைக்கும், தமிழர்களது ஆயுதப்போராட்டத்திற்கும் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியே மூலகாரணம்' இவ்வாறு ஜனாதிபதி பிரேமதாஸ மலைநாட்டுப்பகுதியில் இடம்பெற்ற உள்ளூராட்சி தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் பேசுகையில் தெரிவித்தார்.

''ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி ஆட்சியிலிருந்த காலத்தில் அது அமுல் படுத்திய தனிச் சிங்களச்சட்டம் போன்ற இனவாதத்தை தூண்டும் சட்டங்களை அமுல் செய்ததன் விளைவையே நாம் இன்று அனுபவிக்கின்றோம் என்றும் அவர் சொன்னார்.

இத்தகைய இனவேறுபாட்டுச் சட்டங்களால்தான்இன்று தமிழர்கள் ஆயுதம் ஏந்தி எமக்கெதிராக யுத்தம் செய்கின்றனர்.

தமிழரை அந்நியராக்கி விட்ட சுதந்திரக் கட்சியின் இந்தச் சட்டங்களுக்கு பதிலாக நாம் புதிய பரிகாரங்களைக் காண வேண்டியிருக்கின்றது எனவும் அவர்மேலும் தெரிவித்தார்.

## ஊழியர் தாக்குதல் சம்பவம் இரு பொலிஸார் வேலை நீக்கம்

இந்திய தூதர ஊழியரான வி. இராஜேந்திரனை தாக்கியது தொடர்பாக இரு பொலிஸார் வேலையில் இருந்து தற்காலிகமாக நீக்கப்பட்டுள்ளனர்.

கொள்ளுப்பிட்டி பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த இரு பொலிஸாரே இவ்வாறு தற்காலிக வேலை நிறுத்தம் செய்யப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

### வீரமரணம்

ஊர்காவற்றுறையில்நேற்று முன்தினம் காயமடைந்த குட்டி (மா. இரவீந்திரன் புத்தூர்) நேற்று வீரமரணமடைந்தார்.

இதேவேளை வீரமரணமடைந்த லெப். தியாகு,குட்டி ஆகியோரர்புகழுடல்கள் இன்று புத்தூர் வேம்பிராயில் அஞ்சலிக்கு வைக்கப்படவுள்ளன.

## பதவியா குளநீர் விநியோகம் மீண்டும் ஆரம்பிக்கப்படுகிறது

பதவியா குளத்திலிருந்து விவசாய நிலங்களுக்கு நீர் விநியோகிக்கும் திட்டம் மீண்டும் ஆரம்பிக்கப்படவுள்ளது. எதிர்வரும் ஜூன்மாதத்திற்கு முன்பாக இத்திட்டம் பூர்த்தியடைந்து விடும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்திற்கென ஆறு மில்லியன் ரூபா வரை ஒதுக்க வீடமைப்பு நிர்மாணத்துறையமைச்சர் சிறிசேன கூரே அங்கீகாரமளித்துள்ளார்.

## கருணாநிதியை எதிர்த்து துறைமுகத்தொகுதியில் 39 பேர்

தமிழக முன்னாள் முதலமைச்சர் மு. கருணாநிதி போட்டியிடும்சென்னை துறைமுகப்பகுதியில் 39 வேட்பாளர்கள் எதிர்த்து போட்டியிடவுள்ளதாக சென்னைச் செய்திகள் தெரிவிக்கின்றன.

இதேவேளை தமிழ்நாட்டின் 234சட்டப்பேரவைத்தொகுதிகளுக்கு 2500 வேட்பாளருக்குமேல் போட்டியிடுவதாகவும் 39பாராளுமன்றத்தொகுதிகளுக்கு 350 பேருக்கு மேல்

## பொன்னாலைப் பாலம் ஒன்று படையினரால் தகர்ப்பு

காரைநகர் வலந்தலைச் சந்தியில் நிலைகொண்டுள்ள இராணுவத்தினர் நேற்றுக் காலை 9 மணியளவில் கவச வாகனம் ஒன்றில் வந்து வலந்தலை சந்தியிலிருந்து ... மருந்து வைத்து தகர்த்து விட்டுச் சென்றுள்ளனர்.

காரைநகரை யாழ்ப்பாண பகுதியுடன் இணைக்கும் பாலங்களில் இதுவும் ஒன்று என்பது குறிப்பிடத்தக்கது. (ப-1 71)

## தமிழ்ப் பாடசாலையின் தரத்தைக் குறைக்க முயற்சி

தற்போது க. பொ. த. சாதாரணதரம் வரை இயங்கிவரும் முல்லேரியாவரம் ஸ்ரீ வடிவாம்பிகை தமிழ் வித்தியாலயத்தின் தரம் குறைந்து ஐந்தாம் வகுப்பு வரை நடாத்த கிலாபம் கோட்டக்கல்வி அதிகாரிகளால் யோசனை முன் வைக்கப்பட்டதாக பெற்றோர் ...

## காரைநகர் மோதலில்

## படையினரால் தகர்ப்பு

காரைநகர் வலந்தலைச் சந்தியில் நிலைகொண்டுள்ள இராணுவத்தினர் நேற்றுக் காலை 9 மணியளவில் கவச வாகனம் ஒன்றில் வந்து வலந்தலை சந்தியிலிருந்து மூன்றாவது பாலத்தை வெடி மருந்து வைத்து தகர்த்து விட்டுச் சென்றுள்ளனர்.

காரைநகரை யாழ்ப்பாண பகுதியுடன் இணைக்கும் பாலங்களில் இதுவும் ஒன்று என்பது குறிப்பிடத்தக்கது. (ப-1 71)

முன்பாக இத்திட்டம் பூர்த்தியடைந்து விடும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்திற்கென ஆறு மில்லியன் ரூபா வரை ஒதுக்க வீடமைப்பு நிர்மாணத்துறை

## தரத்தைக் குறைக்க முயற்சி

தற்போது க.பொ.த.சாதாரணதரம் வரை இயங்கி வரும் மூளாய் வேலிவரம் ஸ்ரீ வடிவாம்பிகை தமிழ் வித்தியாலயத்தின் தரம் குறைந்து ஐந்தாம் வகுப்பு வரை நடாத்த இலாபம் கோட்டக்கல்வி அதிகாரிகளால் யோசனை முன்வைக்கப்பட்டதாக பெற்றோர் தெரிவிக்கின்றனர்.

—4 ஆம் பக்கம் பார்க்க

இதேவேளை தமிழ்நாட்டில் 234 சட்டப்பேரவைத்தொகுதிகளுக்கு 2500 வேட்பாளருக்குமேல் போட்டியிடுவதாகவும் 39 பாராளுமன்றத் தொகுதிகளுக்கு 350 பேருக்கு மேல் போட்டியிடுவதாகவும் கணிப்பிடப்பட்டுள்ளது.

## ஊர்காவற்றுறையிலும் படையினர்-புலிகள் மோதல்

ஊர்காவற்றுறையில் இன்ன மூளாய்பொன்னாச்சிக்கடைச் சந்தி. நாரந்தனைப் பகுதியில் உள்ள காவலரண்களிலிருந்து படையினர் புலிகளின் காவலரண் நோக்கி முன்னேறினர்.

நேற்று முன்தினம் காலை இவ்வாறு முன்னேறிய படையினருக்கு உதவியாக பொம்மர்கள், அவ்ரோ ஹெலி என்பனவும் தாக்குதலில் ஈடுபட்டன.

கவசவாகனம் 4ட்ரக்வண்டிகளில் வந்த படையினரை எதிர்த்து விடுதலைப்புலிகள் கடும் தாக்குதல் நடத்தினர்.

இதே சமயம் பலாலி இராணுவ முகாமிலிருந்து இப்பகுதிகளுக்கு ஆட்லறி ஷெல் தாக்குதல்களும் நடைபெற்

—4 ஆம் பக்கம் பார்க்க

## காரைநகர் மோதலில் 6 சிப்பாய்கள் பலி 20 பேர் காயம்

காரைநகரில் இடம்பெற்ற மோதலின் போது இராணுவ தரப்பில் 6 சிப்பாய்கள் பலியானதாகவும் 20 பேர் காயமடைந்ததாகவும் கொழும்பில் பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

காயமடைந்த சிப்பாய்களில் அனேகமானோர் மிதிவெடிகளில் சிக்கி தமது கால்களை இழந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## கட்டுவனில் மாலையில் விமானக் குண்டுவீச்சு

நேற்று மாலை 3.30 மணியளவில் கட்டுவன், குப்பிளான் பகுதியில் விமானத்தாக்குதல்கள் நடைபெற்றன.

இரு பொம்மர்கள் இப்பகுதியில் நான்கு குண்டுகளை வீசின. இவற்றால் சில வீடுகள் சேதமடைந்தன.

இச்சம்பவங்களைத் தொடர்ந்து கட்டுவன் பகுதியில் துப்பாக்கி வேட்டுச் சத்தங்களும் கேட்டன. 48

## மீனம்பாக்கத்தில் கடலோர காவற்படை விமானத்தளம்

சென்னை மீனம்பாக்கம் பகுதியில் இந்திய கடலோர காவற்படையின் விமானத்தளம் ஒன்று நேற்று திறந்து வைக்கப்பட்டுள்ளது.

பாக்குநீரிணைப் பகுதியில் இடம்பெறும் கடத்தல் நடவடிக்கைகளை முறியடிக்கவே இந்த விமானத்தளம் அமைந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்தியக் கடலோர காவற்படையின் இரண்டாவது விமானத்தளம் இது என்பது குறிப்பிடத்தக்கது.

## மூன்று நிறுவனங்கள் மூலம் அரிசி இறக்குமதியாகும்

நாட்டில் அரிசித் தட்டுப்பாட்டை போக்குவதற்கு மூன்று வெளிநாட்டு நிறுவனங்கள் மூலம் இறக்குமதி செய்ய உணவு கூட்டுறவுத் துறை அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

தட்டுப்பாடு ஏற்படும் காலங்களில் இரண்டு லட்சம் மெற்றிக் தொன் அரிசி இறக்குமதியாகி இருப்பில் வைக்கப்படும் எனத் தெரிவிக்கப்படு

—04 ஆம் பக்கம் பார்க்க

## ஊறணியில் தலை வெட்டப்பட்ட இரு தமிழர் சடலங்கள்

மட்டக்களப்பு மாவட்டத்தில் கரடியனாறு முகாமில் இருந்து இலுப்பையடிச் சேனைக்குச் சென்ற படையினர் அங்கு குடும்பஸ்தரான இரத்தினம் (40) என்பவரை சுட்டுக் கொன்றனர். கரடியனாறைச் சேர்ந்த சுப்பு (45) என்பவரை கைது செய்தனர்.

இதேசமயம் ஊறணிச் சந்தியில் தலை துண்டிக்கப்பட்ட இரு தமிழர்களின் அடையாளம் தெரியாத சடலங்கள் மீட்கப்பட்டுள்ளன. (71)

## ஊரடங்கு அமுலான நேற்றும் பரீட்சை நடைபெற்றது

யாழ் மாவட்டத்தில் ஊரடங்குச் சட்டம் அமுலில் இருந்த நேற்றும் க.பொ.த உயர்தர விசேட பரீட்சை எதுவித பாதிப்புமின்றி நடை

—4 ஆம் பக்கம் பார்க்க

## கட்டுப்பாட்டு விலையில் சன்லைற் விற்பனை

லொறியொன்றில் கொண்டு வந்து வைத்து 20 ரூபா வீதம் சன்லைற் விற்ற வர்த்தகருடைய 7 பெட்டி சன்லைற் சோப் சாவகச்சேரி வட்டப் பிரதேச கண்காணிப்புக் குழுவினரால் கண்டுபிடிக்கப்பட்டு 8 ரூபா 25 சதவீதம் பொது மக்களுக்கு விற்பனை செய்யப்பட்டது.

பெருந்தொகையான மக்கள் வரிசையாக நின்று இவற்றை வாங்கினார்கள்.

இதேவேளை 22 ரூபாவுக்கு சன்லைற் விற்றவருக்கு 2000 ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

மட்டுவில்வடக்கைச்சேர்ந்த வர்த்தகர் ஒருவர் இதனைச்

—4 ஆம் பக்கம் பார்க்க

## முகாமையாளர் இடைநிறுத்த விவகாரம்; ஊழியர்கள் அடையாள வேலைநிறுத்தம்!

யாழ் ப. நோ. கூட்டுறவுச் சங்க பொது முகாமையாளர் தற்காலிகமாக வேலையிலிருந்து இடை நிறுத்தப்பட்டுள்ளதை ஆட்சேபித்து மேற்படி ப. நோ. கூ. சங்க ஊழியர்கள் நேற்று முன்தினம் காலை ஒரு மணிநேர அடையாள வேலை நிறுத்த மொன்றை மேற்கொண்டனர்.

பொது முகாமையாளரை கடமையில் அமர்த்தி, அவர் பதவியிலிருக்கும் பொழுதே விசாரணை மேற்கொள்ளப் படவேண்டுமெனவும் அது பற்றிய முடிவுகளை 3 தினங்களுக்குள் வெளியிட வேண்டுமெனவும் கூட்டுறவு ஊழியர் தொழிற் சங்க பட்டணக் கிளையினால் விடுக்கப் பட்ட கோரிக்கைக்கு தகுந்த பதில் வழங்கப்படாத நிலையிலேயே இந்த அடையாள வேலை நிறுத்தத்தை மேற்கொள்ள வேண்டி ஏற்பட்டதாக மேற்படி தொழிற் சங்கம் பத்திரிகைகளுக்கு விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### சிறுவிளம்பரம்

**விற்பனைக்கு**

இயற்கை வழியே சுக வாழ்வுக்கு ஏற்றம் தரும். இயற்கை வளமகொண்டு தயாரித்த ஒலிவ்நானப் பவுடர் எண்ணெய்க் குளியலுக்குச்சிறந்தது இரசு, கண் உடலுக்கே குளிர்ச்சி தருகிறது இதுவும் ஒரு மிக்கவைத் உற்பத்தி. பக்கெற் ஒன்று ரூ 1.50 மட்டுமே. 04113

## மயிலிட்டி மார்புநோய் சிகிச்சை நிலையம் இயங்கமுடியா நிலையில்!

# நோயாளர் பலர் அகதிமுகாம்களில் தஞ்சம்!!

இராணுவ நடவடிக்கைகள் காரணமாக மயிலிட்டியில் இயங்கிவந்த மார்பு நோய் சிகிச்சை நிலையம் தற்போது இயங்காது மூடப்பட்டு உள்ளது.

இச் சிகிச்சை நிலையத்தில் வைத்திய சிகிச்சை பெற்றுவந்த பல நோயாளர்கள் தற்போது மிகுந்த சிரமத்தை எதிர் நோக்குவதாகத் தெரியவந்துள்ளது.

இதேவேளை இவ் வைத்தியசாலையில் இருந்த நோயாளிகளில் சிலர் அகதி முகாம்களில் தஞ்சம் அடைந்து இருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

மார்புநோய் சிகிச்சை நிலையத்தில் சிகிச்சை பெற்றுவந்த பல நோயாளர்கள் தகுந்த பராமரிப்போ, வைத்திய வசதியோ பெறமுடியாதிருப்பதினால் மரண அபாயத்தை எதிர் நோக்குவதாகவும் மேலும் தெரிவிக்கப்படுகின்றது.

(ப-10)

## நெல் கொள்வனவுக்குச் சங்கங்களுக்கு மக்கள் வங்கி பணம் வழங்கும்

கிளிநொச்சியில் கூட்டுறவுச் சங்கங்களுக்கு நெற் கொள்வனவிற்காக மக்கள் வங்கி மூலம் தேவையான அளவு பணத்தினை வழங்க நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

கிளிநொச்சி அரசாங்க அதிபர் க. மாணிக்கவாசகர் மக்கள் வங்கி பிராந்திய முகாமையாளருடன் தொடர்பு கொண்டதையடுத்தே இந்த நடவடிக்கை மேற்கொள்ளப் படவுள்ளது.

கிளிநொச்சி கரைச்சி தெற்கு பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம், பூநகரி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம், பரந்தன் வடக்கு பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் ஆகிய சங்கங்களுக்கே நெற் கொள்வனவுக்காக பணம் வழங்கப் படவுள்ளதாக கிளிநொச்சி கூட்டுறவு ஆணையாளர் க. பஞ்சலிங்கம் தெரிவித்தார்.

(ப-6)

## அதிபர்களுக்கான கல்விக் கருத்தரங்கு

யாழ்ப்பாணம், வடமராட்சி, தென்மராட்சி, பண்டத்தரிப்பு கல்விக் கோட்டப் பகுதியில் கடமைபுரியும் சகல அதிபர்களும், கல்வித்திணைக் களத்தினால் நடாத்தும் கல்விக் கருத்தரங்கில் தவறாது கலந்துகொள்ளும்படி கோட்டக் கல்விப் பணிப்பாளர்கள் கேட்டுள்ளனர்.

கருத்தரங்குகள் நடைபெறவுள்ள இடங்களின் விபரம் வருமாறு:

யாழ் கல்விக் கோட்டம்- 27 ஆம் திகதி மு. பகல் 9 மணிக்கு யாழ் இந்து மகளிர் கல்லூரி மண்டபத்தில்.

வடமராட்சி கல்விக் கோட்டம்- 27 ஆம் திகதி பி. பகல் 2 மணிக்கு வட இந்து மகளிர் கல்லூரி பருத்தித்துறை

தென்மராட்சி கல்விக் கோட்டம்- 28 ஆம் திகதி பி. பகல் 2 மணிக்கு றிபேக் கல்லூரி சாவகச்சேரி.

பண்டத்தரிப்பு கல்விக் கோட்டம்- 29 ஆம் திகதி பி. பகல் 2 மணிக்கு மகளிர் கல்லூரி பண்டத்தரிப்பு.

## ஆண்டு ஒன்று புதிய அனுமதி

அடுத்த ஆண்டில் அரச பாடசாலைகளுக்கு ஆண்டு ஒன்றில் புதிய மாணவர்களை அனுமதிப்பதற்கான விண்ணப்பங்கள் மே மாதம் 31 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பப்படல் வேண்டுமெனக் கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

மாதிரிப் படிவத்திற்கு அமைய விண்ணப்பத்தினைத் தயாரித்து வதிவிடத்திற்கு அருகிலுள்ள பாடசாலை அதிபர்களுக்கு அவை பதிவுத் தபாலில் அனுப்பி வைக்க வேண்டுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

## மலேரியா நோய்

அம்பன், குடத்தனை நாகர் கோவில் பகுதிகளில் மலேரியா நோய் அதிகமாக பரவி வருகின்றது.

அம்பன் அரசினர் வைத்திய சாலையில் இந்த நோயினால் பீடிக்கப்பட்டவர்கள் பலர் தினமும் சிகிச்சைபெற்று வருகிறார்கள்.

(-6)

## வலிமேற்கில் கோழி நோய்

## தபால் பெட்டிகளை

உ

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



முல்/சிலாவத்தையின் செல்வ மகளும் முல்/புதுக்குடியிருப்பின் பூமகளுமான செம்மனச்செல்வி

### திருமதி பொன்னையா இலக்குமி

மண்ணிடை வரவு: 1901. 10. 12

விண்ணிடை விரைவு: 1990. 05. 09

திதி: 1991. 04. 28

## 31ஆம் நாள் நினைவஞ்சலி

### அந்தியேஷ்டிக் கிரியையும் சபிண்டிகரணமும்



### அமரர் திருமதி சரோஜினி ஞானபண்டிதன்

(சரோ)

(சட்டத்தரணி, பிரசித்த நொத்தாரிசு)

மலர்வு: 10. 02. 1956

உதிர்வு: 28. 03. 1991

## திருமதி பொன்னையா இலக்குமி

மண்ணிடை வரவு: 1901. 10. 12

விண்ணிடை விரைவு: 1990. 05. 09

திதி: 1991. 04. 28

செந்திருவை ஒத்தனை நீ இலக்குமி யென்றே
சிறப்புறு பெயர்பெறுந்தச் சீராய் வாழ்ந்தாய்
சொந்தமுறு மக்கள் மருமக்கள் அன்றிச்
சொந்தவூர் மக்களும் பிறரும் கூட
வந்து உம்மைப் பழகுவார் எவரும் உன்னை
வாயார 'ஆச்சி' யென்றே வழங்கி நிற்கும்
பந்தநிலை மறந்தெம்மை விட்டு நீங்கிப்
பன்னிரண்டு மாதங்கள் பறந்த தாச்சி
மக்கள்மரு மக்களுடன் பேரர் பேர்த்தி
மற்றுமுள கொள்ளுப்பேரர் சுற்றம்
அத்தனையும் காத்துநின்றாய் மெழுகுவர்த்தி
அது உருகி ஒளி வீசும் ஆற்றல் போலே
மிக்கபெருந் தலைவனையும் இழந்த பின்னும்
மிகுந்தபெருஞ் சேவை நீ மிளிர நின்றாய்
புக்கிறைவன் பாதமலர்ப் புனித முற்றாய்
பொலிகவுயர் சாந்திநிலை சாந்தி! சாந்தி!!

இங்ஙனம்
மக்கள், மருமக்கள், பேரர்,
பேர்த்தியர், கொள்ளுப்
பேரர் (பூட்டர்கள்) சகோதரர்,
சக உணர்வு சார்ந்தோர்.

மு/புதுக்குடியிருப்பு,
சித்திரை பௌர்ணமை
நாள்,
1991. 04. 28
04115

கோட்டம்- 29 ஆம் திகதி பி. பகல் 2 மணிக்கு மகளிர் கல்லூரி பண்டத்தரிப்பு.

## வலிமேற்கில் கோழி நோய்

வலி மேற்குப் பிரிவில் பரவலாகக் கோழிகளுக்கு நோய் ஏற்பட்டுள்ளது. இதனால் கோழி வளர்ப்பவர்கள் பெரிதும் நஷ்டமடைந்து வருகின்றனர். தினமும் கோழிகள் இறக்கும் வீதம் அதிகரித்து வருவதாகவும் கூறப்படுகிறது.

அம்பன் அரசினர் வைத்திய சாலையில் இந்த நோயினால் பீடிக்கப்பட்டவர்கள் பலர் தினமும் சிகிச்சைபெற்று வருகிறார்கள். (-6)

## தபால் பெட்டிகளை திருத்த முயற்சி

முல்லை மாவட்டத்தில் வன்செயல்களினால் சேதமடைந்த தபால் சேகரிக்கும் பெட்டிகளைத் திருத்துவதற்கான நடவடிக்கைகளை முல்லை மாவட்டத் தபால் அத்தியட்சகர் மேற்கொண்டுள்ளார். 33


வீட்டுச் சலவைக்கு அதிசக்தி வாய்ந்த

**மில்க்வைற் திரவ சவர்க்காரம்**

அழுக்கைத் துரிதமாகப் போக்கி
துணிகளுக்கு பளிச்சிடும்
வெண்மையைத் தருகிறது.

அரைப்போத்தல் ரூபா 45/- மட்டுமே

பத்துக்கும் மேலாகவும் வாங்குவோருக்குப்
போத்தலுக்கு ரூபா 5/- விசேட கழிவு

எல்லாக்கடைகளிலும் ப.நோ.கூ. சங்கங்களிலும்
விற்பனையாகிறது

**மில்க்வைற்**

04121


## அமரர் திருமதி சரோஜினி ஞானபண்டிதன்

(சரோ)
(சட்டத்தரணி, பிரசித்த நொத்தாரிசு)

மலர்வு: 10. 02. 1956

உதிர்வு: 28. 03. 1991

சட்டத்தரணி "சரோ" ஞானபண்டிதனின் பட்டத்தரசி பாதிவழியில் வாழ்க்கை வட்டத்தை விட்டு வானுலகு ஏகியதால் சொட்டுந்தான் செயும் கண்ணீர் துடைப்பவர் யார்?

—சொல் இறைவா!

அன்புடையீர்,

அமரர் சரோஜினி ஞானபண்டிதன் அவர்களின் மேற்படி கிரியைகள் 27-04-1991 சனிக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் கொழும்பில் நடைபெற உள்ளன. அக்கிரியைகளிற் கலந்து அன்னாரின் ஆத்ம சாந்திக்காக பிரார்த்திக்குமாறு அன்புடன் வேண்டுகின்றோம்.

அவ்வமயம் உடுப்பிட்டியிலுள்ள அன்னாரது இல்லத்திலும் மு.ப 9 00 மணியளவில் அவரின் ஆத்ம சாந்திக்கான பிரார்த்தனை நடைபெறும் என்பதனை உற்றார், உறவினர், நண்பர்களுக்கு அறியத்தருகின்றோம்.

இங்ஙனம்
தங்கள் அன்புள்ள அன்னாரின் நாயகன்
சின்னத்துரை- ஞானபண்டிதன்
(தொழில் முகாமையாளர் காங்கேசன்
சீமெந்து கூட்டுத்தாபனம்),
தாயார்: மரகதவல்லி கணபதிப்பிள்ளை,
குடும்பத்தினரும்

இல. 6 ஹெவன் கடுவ பிளேஸ்
OFF 1வது ஷப்பெல் லேன்,
வெள்ளவத்தை
கொழும்பு

04124

# குவைத்தில் 3,325 இலங்கைத் தொழிலாளர்கள் போரினால்காணாமல்போயுள்ளதாக அறிவிப்பு!

வளைகுடாப் போரினால் பேரழிவுக்குட்பட்ட குவைத்தில் 3325 இலங்கையர்கள் சிக்குண்டு காணாமல் போய் விட்டதாக அறிவிக்கப்படுகின்றது.

அவர்களைத் தேடிக் கண்டுபிடிக்கும் முயற்சி தொடருகின்ற அதேவேளை 75 பேரின் இருப்பிடம் பற்றிய விவரம் இதுவரை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இவர்கள் விரும்பின் இலங்கைக்கு அனுப்ப நடவடிக்கை மேற்கொள்ளப்படும் எனவும் அறிவிக்கப்படுகிறது. அநேகமானோர் தொடர்ந்து அங்கு இருக்கவே விருப்பம் தெரிவித்துள்ளனராம்.

## கால்நடைக் கயிறுகளும் கள்வர்களிடம் தப்பவில்லை!

கால்நடைகளில் கட்டப்பட்டிருக்கும் பிணைப்புக் கயிறுகள் திடீர், திடீர் என காணாமல் போய் விடுகின்றன.

இந்த புதுமைத் திருட்டு நவாலிப்பகுதியில் தற்பொழுது தாராளமாக நடக்கிறதாம்.

சிறுதானிய செய்கை பாதிக்கப்படாமல் இருப்பதற்காக கால்நடை வளர்ப்போர் தம் கால்நடைகளை நீளமான பிணைப்புக்கயிற்றினால் கட்டிவிடுப்போக தருணம் பார்த்திருக்கும் திருடர்கோஷ்டி அக்கயிற்றினைக் கழட்டி, இராக்கியைப் பயன்படுத்தி பணமாக மாற்றிவிடுகிறதாம். (ப-11)

## இந்திய தேர்தலில் போட்டியிட 15.000க்கு மேற்பட்டோர் மனு!

இந்தியாவில் அடுத்தமாதம் நடைபெறவுள்ள தேர்தலில் போட்டியிடுவதற்கு நேற்றுக் காலைவரை சுமார் பதினையாயிரத்திற்கும் மேற்பட்டோர் வேட்பு மனுக்களை சமர்ப்பித்துள்ளனர்.

நேற்றுப் பிற்பகலுடன் இந்திய தேர்தலுக்கான வேட்புமனு ஏற்றல் நிறுத்தப்பட்டுவிட்டது. வேட்பாளர்கள் திங்கட்கிழமை வரை தமது மனுக்களை வாபஸ் பெற்றுக்கொள்ள முடியும்.

தமிழ்நாட்டில் நேற்றுக் காலை வரை சட்டசபைக்கு 2350 வேட்பாளர்களும், மக்கள் அவைக்கு 325 வேட்பாளர்களும் வேட்பு மனுக்களைத் தாக்கல் செய்துள்ளனர்.

## சீ. டபிள்யூ. ஈ. அமைக்க முயற்சி

மன்னார் நகரப் பகுதியில் சீ. டபிள்யூ ஈ. ஸ்தாபனம் ஒன்றை அமைப்பதற்கு முயற்சி எடுக்கப்படுகிறது. இதற்கான தளபாடங்கள் கப்பலில் வந்து சேர்ந்துள்ளன.

## தமிழகத்தில் எண்ணெய் ஊற்று! அதிக நிலவாயுவும் பெறப்படுகிறது!!

தமிழகத்தில் தஞ்சாவூர் கமலாபுரம் அருகே எண்ணெய் ஊற்று ஒன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இந்த எண்ணெய் ஊற்றிலிருந்து தற்பொழுது நாளொன்றுக்கு 635 பீப்பா எண்ணெயும், 12358 கனமீற்றர் வாயுவும் பெறப்பட்டு வருகின்றது.

இதேபோன்ற வேறு சில எண்ணெய் ஊற்றுக்களும் தமிழகத்தில் காணப்படுவதாக அறிவிக்கப்படுகின்றது.

## டாக்டர் பாலமுரளி கிருஷ்ணாவுக்கு மத்திய அரசின் பத்மபூஷண்விருது

இந்த ஆண்டுக்கான இந்திய மத்திய அரசின் விருதுகள் இரு தமிழ் நாட்டுக்கலைஞர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன.

பிரபல இசை மேதை டாக்டர் பாலமுரளிகிருஷ்ணாவுக்கு பத்மபூஷண் விருதும், நாட்டிய கலைஞர் அலமேலுவள்ளிக்கு பத்மஸ்ரீ விருதும் வழங்கப்பட்டுள்ளன.

தமிழ் நாடு அரசின் கலைமாமணி விருது யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த பிரபல தவில் மேதை கணேசனுக்கு வழங்கப்பட்டுள்ளமை யாவரும் அறிந்ததே.

## பயிலுநர் ஆசிரியர் கருத்தரங்கு

பயிலுநர் ஆசிரியர்களுக்கு நடப்பாண்டு மேற்கொள்ளவிருக்கின்ற பயிற்சி பற்றிய கருத்தரங்கு 29 ஆம் திகதி திங்கட்கிழமை மு. பகல் 9 மணிக்கு யாழ் இந்து மகளிர் கல்லூரி மண்டபத்தில் நடக்கவுள்ளதால் சகல பயிலுநர் ஆசிரியர்களும் கலந்து கொள்ளும்படி கல்விப்பணிப்பாளர் கேட்டுள்ளார். (ப-11)

## கச்சதீவுக்கருகில் கடற்படை சூடு! தமிழக மீனவர் படுகாயம்; தடுத்துநிறுத்தக் கோரிக்கை

கச்சதீவுக்கருகில் மீன் பிடித்துக் கொண்டிருந்த இந்திய மீனவர்கள்மீது ஸ்ரீலங்கா கடற்படையினர் சுட்டதில் ஒரு மீனவர் படுகாயமுற்றார்.

இச் சம்பவம் நேற்று முன்தினம் நிகழ்ந்ததாக அறிவிக்கப்படுகின்றது.

இராமேஸ்வரத்திலிருந்து மீன்பிடிக்கவென படகொன்றில் கச்சதீவுக்குச் சென்ற 5 தமிழக மீனவர்களே கடற்படையினரின் தாக்குதலுக்கு நேற்று முன்தினம் உள்ளானவர்களாவர்.

சமீபகாலமாக கச்சதீவு கடற்பகுதியில் தொடரும் ஸ்ரீலங்கா கடற்படையினரின் தாக்குதலை உடன் தலையிட்டு நிறுத்துமாறு இராமேஸ்வரம் மீனவர் சங்கம் தமிழக ஆளுநரிடம் நேற்றுக் கோரிக்கை விடுத்துள்ளதாக அறிவிக்கப்படுகின்றது.

## இத்தாலியில் பனிப் புயலில் சிக்கி ஒன்பது இலங்கையர் பலி!

இத்தாலிக்கு அருகில் நிகழ்ந்த பனிப்புயல் தாக்கத்தில் ஒன்பது இலங்கையர்கள் கொல்லப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இலங்கையிலிருந்து இத்தாலிக்குச் செல்வதற்காகச் சென்ற 50 பேர் கொண்ட குழுவொன்று பஸ் வண்டியொன்றில் இத்தாலியைத் தரைமார்க்கமாக நெருங்கிக் கொண்டிருந்தபோதே குறித்த பஸ் பனிப்புயலில் சிக்கியது.

இறந்தோரில் பருத்தித்துறையைச் சேர்ந்த கா. சிருசாந்தினி (5), கா. பிரதீபன் ஆகிய சகோதரர்களும் அடங்குவதாகவும்இவர்களது தாயாரான செல்வரஞ்சினி மயக்கமுற்ற நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (ப-10)

## தமிழ் மொழி கல்விக் கருத்தரங்கு

தமிழ்ச் சேவைக்கால ஆசிரியர் ஆலோசகர்களுக்கு கல்வித் திணைக்களத்தினால் இன்று சனிக்கிழமை காலை 9 மணிக்கு வேம்படி மகளிர் கல்லூரி மண்டபத்தில் நடாத்தப்படவுள்ள தமிழ் மொழிக் கல்விக் கருத்தரங்கில் சகல தமிழ்ச் சேவைக்கால ஆசிரியர் ஆலோசகர்களையும் கலந்துகொள்ளும்படி கல்விப் பணிப்பாளர் கேட்டுள்ளார். (ப-11)

## முரசொலியில் தொடராக வெளிவந்த 'தமிழரின் தாகம்' நூலுருவானது

பிரபல கவிஞர் மு.வே. யோ. வாஞ்சிநாதன் 1987 ஆம் ஆண்டு வாரமுரசொலியில் தொடராக எழுதிய 'தமிழரின் தாகம்' குறுங்காவியம் தமிழ்த்தாய் பதிப்பகத்தினால் நூலுருவில் வெளியிடப்பட்டுள்ளது.

அன்னியரின் கையில் சிக்கிக்கிடக்கும் தாயக மண்ணின் அவலங்களையும், இடர்ப்பாடுகளையும் அதற்கான மீட்புப் போரில் வேங்கைகளின் அளப்பரிய பங்களிப்பையும் மையமாக வைத்து தமிழீழ தேச விடுதலைப்போர் பற்றிய இக் குறுங்காவியம் படைக்கப்பட்டுள்ளது.

பாணபதிகம் என ஆறு பதிகங்களாக எழுதப்பட்டுள்ள இக் குறுங்காவியத்தில் தமிழீழத்தின் ஒவ்வொரு கிராமங்களினதும் தனிச்சிறப்புக்களையும், வரலாறுகளையும், அவ்வப்பகுதி மக்களின் சிறப்புப் பண்புகளையும் கவிஞர் மு.வே.யோ. வாஞ்சிநாதன் சிறப்பாக, இரத்தினச்சுருக்கமாக வர்ணித்துள்ளார்.

## சுந்தரம்பிள்ளை கலாநிதியாகிறார்

ஈழத்தின் மூத்த கவிஞர்களுள் ஒருவரான காரை செ. சுந்தரம்பிள்ளை கலாநிதிப் பட்டம் (Ph. D) பெறுகிறார்.

## கிடுகு பின்னல், துலா மிதித்தல் போட்டிகள் இருபாலாரும் ஆர்வத்துடன் பங்குபற்றினர்!

தொழிலாளர் தினத்தை முன்னிட்டு மக்களின் சுய தொழிலை ஊக்குவிக்கும் நோக்குடன் பல்வேறு போட்டிகளையும் தமிழீழ ஆய்வு நிறுவனம் நடாத்தி வருகின்றது.

இத்தொடரிலான கிடுகு பின்னல் துலாமிதித்தல், பதநீர்வடித்தல், உழவுப் போட்டிகள் நேற்று முன்தினம் தென்மராட்சியில் நடைபெற்றன.

தென்மராட்சி அரசியல் பொறுப்பாளர் செல்வராசா இப்போட்டிகளை ஆரம்பித்து வைத்தார். ஆய்வு நிறுவனத்தின் தென்மராட்சிப் பொறுப்பாளர் விஜே இதற்கான ஏற்பாடுகளை மேற்கொண்டிருந்தனர். ஆண், பெண் இருபாலாரும் போட்டிகளில் ஆர்வத்துடன் பங்குபற்றியிருந்தனர். (ப-26)

## ஒப்பந்த அடிப்படையில் மீள்நியமனமான ஆசிரியர்களின் விவரம் சேகரிப்பு

சுயவிருப்பில் இளைப்பாறியவர்களும் ஒப்பந்த அடிப்படையில் ஒருவருடத்துக்குச் சேர்த்துக் கொள்ளப்பட்ட கணித, விஞ்ஞான, ஆங்கில ஆசிரியர்...

கோட்டக்கல்வி அதிபர்களின் பொறுப்புடன் உடனடியாக இவ் விவரங்களை அனுப்பி வைக்குமாறு வட...

## எலிசபெத் மகாராணி பதவி விலகி சார்ல்ஸுக்கு வழி விடுவாரா?

எலிசபெத் மகாராணி அரச பதவியிலிருந்து இளைப்பாறி 42 வயதுடைய அவரது மகன் இளவரசர் சார்ல்ஸிடம் பொறுப்பைக் கையளிக்க...

இது விசயமாக கருத்து வெளியிட்ட 'சண்டே டெலிகிறாவ் பத்திரிகை' மகாராணி தனது 25 வது வயதில் முடி சூட்டியபோது எடுத்த சத்தி...

## ஆசிரியர்களின் விவரம் சேகரிப்பு


சுயவிருப்பில் இளைப்பாறி மீளவும் ஒப்பந்த அடிப்படையில் ஒருவருடத்துக்குச் சேர்த்துக் கொள்ளப்பட்ட கணித, விஞ்ஞான, ஆங்கில அதிபர், ஆசிரியர்களின் விபரங்களை மாகாண கல்வி அமைச்சு சேகரித்து வருகின்றது.

கோட்டக்கல்வி அதிபர்களின் ஊடாக இவ் விபரங்களை அனுப்பி வைக்குமாறு வடகிழக்கு மாகாணக் கல்வி அமைச்சின் சிரேஷ்ட உதவிச் செயலாளர் கோரியுள்ளார்.

(78)

...கான மீட்புப் போரில் வேங்கைகளின் அளப்பரிய பங்களிப்பையும் மையமாக வைத்து தமிழீழ தேச விடுதலைப்போர் பற்றிய இக்குறுங்காவியம் படைக்கப்பட்டுள்ளது.

திருகோணமலை பதிகம், மட்டக்களப்பு பதிகம், வன்னி பதிகம், மன்னார் பதிகம், மலையக பதிகம், யாழ்ப்



# இரத உற்சவம்

கல்வியங்காடு
அருள்மிகு ஸ்ரீ வீரபத்திரசுவாமி
பத்திரகாளி சமேதராய்

தேரேறி வீதி வலம் வந்து
மங்களம் பொங்கும் பேரருள் நல்க
நல்லாசி வேண்டுகிறார்கள்

கனடாவில் இருந்து
க. கௌரிபாலன்-க. சங்கரபாலன்-ச. ஜெகதீசன்

04108

## சுந்தரம்பிள்ளை கலாநிதியாகிறார்

ஈழத்தின் மூத்த கவிஞர்களுள் ஒருவரான காரை செ. சுந்தரம்பிள்ளை கலாநிதிப் பட்டம் (Ph. D) பெறுகிறார். 'வட இலங்கை நாட்டார் அரங்கு' எனும் பொருள் பற்றிய ஆய்வினை மேற்கொண்டமைக்கே யாழ் பல்கலைக்கழகம் இப்பட்டத்தை வழங்கியுள்ளது.

வட இலங்கைப் பாரம்பரிய கலைகளை குறிப்பாக நாட்டார் கூத்துக்களை இவர் விரிவாக ஆராய்ந்து இதுவரை வெளிக் கொணரப்படாத பல புதிய தகவல்களை இவ்வாய்வின் மூலம் வெளிக்கொணர்ந்துள்ளார் எனத் தெரிய வருகிறது.

கடந்த வருடம் 'ஈழத்து இசை நாடக வரலாறு' எனும் நூலை வெளியிட்ட இவர் இந்த ஆய்வேட்டினையும் நூலுருவில் வெளிக்கொணரவுள்ளார். பேராசிரியர் கா. சிவத்தம்பியின் மேற்பார்வையில் இவர் இந்த ஆய்வினைச் செய்திருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

முரசொலியில் 'காவேரி' எனும் சிறந்த தொடர் காவியத்தை எழுதிய காரை செ. சு எமது வாசகர்களுக்குப் புதியவரல்லர். இவரது சங்கிலியன், தேனாறு ஆகிய நூல்கள் சாகித்திய மண்டலப் பரிசில் பெற்றவையாகும்.

## சார்ல்ஸுக்கு வழி விடுவாரா?

எலிசபெத் மகாராணி அரச பதவியிலிருந்து இளைப்பாறி 42 வயதுடைய அவரது மகன் இளவரசர் சார்ல்ஸிடம் பொறுப்பைக் கையளிக்க வேண்டுமென்ற கோரிக்கைகளும் வாதப்பிரதிவாதங்களும் மீண்டும் பிரிட்டனில் எழத் தொடங்கியுள்ளன.

மகாராணி தனது 65 வது பிறந்த நாளைக் கொண்டாடியபோது இவ்விடயம் மீண்டும் எழுப்பப்பட்டது.

இது விசயமாக கருத்து வெளியிட்ட 'சண்டே டெலிகிராவ் பத்திரிகை' மகாராணி தனது 25 வது வயதில் முடிசூட்டியபோது எடுத்த சத்தியப் பிரமாணத்திற்கு அமைய இறக்கும்வரை பிரிட்டிஷ் மக்களுக்குச் சேவை புரிய வேண்டும்' என்று தெரிவித்துள்ளது.

ஸ்கை தொலைக்காட்சி நிறுவனம் எடுத்த கருத்துக்கணிப்பின் படி பிரிட்டிஷ் மக்களில் அநேகமானோர் அவர் இளைப்பாறுவதை விரும்பவில்லை.

## யுத்தத்தின்பின் முதல் தடவையாக வியட்னாமுக்கு அமெரிக்கா உதவி

அமெரிக்கா வியட்னாமுக்கு மனிதாபிமான உதவிகள் சிலவற்றை வழங்கப்போவதாக அறிவித்துள்ளது.

இதன்படி 10 லட்சம் டாலர் பெறுமதியுடைய செயற்கை உடல் உறுப்புக்களை வியட்னாமுக்கு வழங்க அமெரிக்கா முன்வந்துள்ளது. அமெரிக்காவிற்கும், வியட்னாமுக்கு மிடையேயான யுத்தம் முடிவுற்று 10 வருடங்களின் பின்னர் வியட்னாமுக்கு உதவி வழங்க அமெரிக்கா முதல் தடவையாகத் தற்பொழுது முன்வந்துள்ளது.

## சுகாதார திணைக்கள அலுவலர்க்கு அலுவலக அடையாள அட்டை

இதுவரை தங்கள் திணைக்கள அடையாள அட்டைகளைப்பெறாமலிருக்கும் யாழ் சுகாதார திணைக்கள ஊழியர்களுக்கு விரைவில் அடையாள அட்டைகளை வழங்குவதற்கு யாழ் பிரதேச சுகாதார சேவைப் பணிப்பாளர் நடவடிக்கை மேற்கொண்டுள்ளார்.

திணைக்களத்தில் கடமையாற்றும் நிரந்தர ஊழியர்களுக்கே இந்த திணைக்கள அடையாள அட்டைகள் இலவசமாக வழங்கப்படவுள்ளன.

# சட்டத்தரணி லியனாராச்சி மரணம் குறித்து 4 ஆவது நபரை விசாரிக்க நடவடிக்கை

சட்டத்தரணி லியனாராச்சி கொலை வழக்கில் ஏற்கனவே மூன்று சந்தேக நபர்களும் உயர் நீதிமன்றத்தால் விடுவிக்கப்பட்டமை தெரிந்ததே. இக்கொலையுடன் நாலாவது நபர் சம்பந்தப்பட்டுள்ளாரா என்பதை அறிவதற்கு சட்டமா அதிபர் புதிய விசாரணை ஒன்றை நடாத்தத் தீர்மானித்துள்ளார்.

சட்டமா அதிபரையும், பொலிஸாரையும் இக்கொலைக்கு காரணம் யார் என்பதை அறிய முழு விசாரணை நடாத்துமாறு உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளதையடுத்தே சட்டமா அதிபர் இந்த நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளார்.

இது குறித்து சட்டமா அதிபர் திணைக்கள அதிகாரிகளை பொலிஸாருக்கு ஆலோசனை வழங்குமாறு பணித்துள்ளார்.

லியனாராச்சி கொலை வழக்கில் சந்தேக நபர்களான பொலிஸாருக்காக எந்த சட்டத்தரணிகளும் நீதிமன்றத்தில் ஆஜராகவில்லை எனவும் தெரிவிக்கப்படுகிறது.

## ஆசிரியர் சம்பளத்திட்ட அதிகரிப்பு வெளிவரும்?

ஆசிரியர்களது சம்பள அதிகரிப்பு, நிர்வாகச் சேவை உத்தியோகத்தர் வருடாந்த வருமானத்தை ஒரு லட்சமாக்குவது போன்ற சிபார்சுகள் செய்யப்பட்டுள்ளன.

இந்தச் சிபார்சுகள் பொது நிர்வாக அமைச்சிற்கும், திறைசேரிக்கும் அங்கீகாரத்திற்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாக கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

சர்வதேச ஆசிரியர் தினமன்று உயர் கல்வியமைச்சர் லலித் அத்துலத்முதலி இவை தொடர்பாக அறிவிப்பை வெளியிடலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

## முல்லைத்தீவு மாவட்டத்தில் ஒரு இடத்தில் மட்டும் பரீட்சை

முல்லைத்தீவு மாவட்டத்தில் ஒரே ஒரு பாடசாலையில் மட்டும் கல்விப் பொதுத்தராதரப் பத்திர உயர்தர விசேட பரீட்சைகள் நடைபெற்று வருகிறது.

முள்ளியவளை வித்தியானந்தாக் கல்லூரியே பரீட்சார்த்திகளின் பரீட்சை மண்டபமாகத் தெரிவு செய்யப்பட்டு பரீட்சைகள் நடைபெற்று வருவதாகப் பரீட்சைத் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன. 38

## வர்த்தக வங்கியில் சிறுவருக்குப் புதிய சேமிப்பு

வர்த்தக வங்கி (கொமர்ஷியல் வங்கி) 'இசுறு' சிறுவர் சேமிப்புக் கணக்கு ஒன்றை அறிமுகப்படுத்தியுள்ளது.

மாதாந்தம் 50 ரூபா செலுத்தி குறைந்தது 24 மாதங்களுக்கு சேமிக்கலாம் எனவும் அந்த வங்கியின் கொழும்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

மேலும் சேமிக்க விரும்பினால் 60 மாத காலத்துக்கு மாதாந்தம் ஆயிரம் ரூபா வரை கூடச் செலுத்தி சேமிக்கலாம் எனவும் தெரிவிக்கப்படுகிறது. (38)

## ஆரம்பம்

சித்திரை மழையை அடுத்துப் பயிர்ச் செய்கை நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

அநேக இடங்களில் தரை பண்படுத்தல் வேலைகள் மேற்கொள்ளப்படுவதைக் காண முடிகிறது.

இம்முறை பயறு குரக்கன் முதலிய உப உணவுப் பயிர்களே அதிகளவில் செய்கை பண்ணப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (ப2)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
இலங்கை

### அறிவித்தல்

### தொழிலாளர் கல்விச் சான்றிதழ்ப் பயில் நெறி 1990/91

தொழிலாளர் கல்விச் சான்றிதழ்ப் பயில் நெறிக்கு 101 மாணவர்கள் தெரிவுசெய்யப்பட்டு அவர்களது சொந்த முகவரிக்கு கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளன. குறிப்பிட்ட பாட நெறிக்குத் தெரிவு செய்யப்பட்ட மாணவர்கள் தமது பதிவிற்கான ஆவணங்களுடன் பல்கலைக்கழகத் தேர்வுகளும் அனுமதிகளும் கிளைக்கு 91.4.29 ஆம் திகதி திங்கட்கிழமை மு. ப. 9 00 மணிக்கு நேரடியாகச் சமூகமளிக்கவும்.

மேற்கூறப்பட்ட திகதியில் பதிவு செய்யத் தவறிய மாணவர்கள் பதிவு செய்யத்தவறியவர்களாகக் கருதப்படுவர்.

தொழிலாளர் கல்விச் சான்றிதழ்ப் பயில் நெறியின் தொடக்க விழா 1991. 05. 01 புதன்கிழமை முற்பகல் 8. 00 மணிக்கு யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்துக் கைலாசபதி கலையரங்கில் நடைபெறும்.

பதிவாளர்

## பெரியகடைப் பகுதி வாகன பாதுகாப்பு நிலையம்

விமானத்தாக்குதல்களால் அழிக்கப்பட்ட யாழ் பெரிய கடையின் ஒருபகுதி விரைவில் வாகனப் பாதுகாப்பு நிலையமாக மாற்றப்படும் என மாநகரசபை வட்டாரங்கள் தெரிவித்தன.

தற்போது அப்பகுதிகளிலுள்ள கட்டிட இடிபாடுகள் அகற்றும் பணியில் மாநகர சபை ஊழியர்கள் செயற்பட்டு வருகின்றனர். 70

## கெயர் ஸ்தாபனத்தின் பிரதிநிதிகள் விவசாயிகள் சந்திப்பு

அகில உலக கெயர் ஸ்தாபனத்தின் உதவியினால் மருதித்துறை புலோலி மேற்கு சிக்கன கடனுதவி கூட்டுறவுச் சங்கத்தினால் மேற்கொள்ளப்பட்ட விவசாய நிலைகளை இலங்கைக்கான கெயர் ஸ்தாபனத்தின் பிரதிநிதி திரு. ஹெவின் ஹென்றி மற்றும் உயர் அதிகாரிகள் குழுவினரும் நேற்று நேரில் பார்வையிட்டு விவசாயிகளுடன் உரையாடினர்.

மற்றும் ஏனைய நிறுவனங்களூடாக கெயர் ஸ்தாபனத்தின் விவசாய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் பகுதிகளையும் இக்குழு பார்வையிட்டது. (38)

## க. பொ. த. உ. த. மாணவருக்கு வானொலியில் ஆங்கில பாடம்

க.பொ.த உயர்தர வகுப்பு மாணவர்களுக்கு ஆங்கில மொழி அறிவை வளர்க்க வானொலி மூலம் பயிற்றுவிக்க கல்வி உயர் கல்வி அமைச்சர் லலித் அத்துலத்முதலி தீர்மானித்துள்ளார்.

அதிகாலை 5 மணி முதல் 6 மணிவரை இதற்கான கல்வி ஒலிபரப்பை வானொலியில் ஏற்பாடு செய்ய வேண்டும் எனவும் அவர் தெற்கில இடம்பெற்ற வைபவம் ஒன்றில் கூறினார்.

## சுகாதாரக் கல்விக்கு இவ்வாண்டில் முதலிடம்

சுகாதார அமைச்சு இந்த வருடத்திற்கான திட்டத்தில் சுகாதாரக் கல்விக்கே முன்னுரிமை கொடுக்கும். இதற்கான பணிப்புரையை சுகாதார மகளிர் விவகார அமைச்சு சகல சுகாதார அத்தியட்சகர்களுக்கும் அனுப்பி வைத்துள்ளது

அரச வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற வரும் நோயாளர்களின் நோய்களில் பெரும்பாலானவை சுகாதாரக் கல்வி அறிவினால் தடுக்கக் கூடியவை எனத் தெரிவிக்கப்படுகிறது.

ஆனால் இவற்றிற்காக சுகாதார அமைச்சு பெரும் தொகையான பணத்தைச் செலவிட்டு வருகிறது. இச் செலவினத்தை குறைப்பதற்காகவே சுகாதாரக் கல்விக்கு முன்னுரிமை கொடுக்க தீர்மானிக்கப்பட்டுள்ளதாக கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன. 38

## கொழும்புத் தபால்கள் பருத்தித்துறையில் தேக்கம்

கொழும்பிலிருந்து கப்பலில் கொண்டு வரப்பட்ட தபால் பொதிகள் பருத்தித்துறையில் தேங்கிக் கிடக்கின்றன.

ஊரடங்குச் சட்டம் நீக்கப்பட்ட பின்னரே இப்பொதிகள் தரம் பிரிக்கப்பட்டு விநியோகிக்கப்படும் என தெரிவிக்கப்படுகிறது. 83

## யாழ் மாவட்டத்தில் நோய்கள் தீவிரமாகப் பரவுகின்றன

யாழ் மாவட்டத்தில் தற்போது வேகமாகப் பரவிவரும் நோய்களுக்கு நோய்த் தடுப்புப் பற்றிய கல்வி மக்கள் மத்தியில் குறைவாகவுள்ளமையே முக்கிய காரணமென சுகாதாரப் பகுதி உயரதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

குறிப்பாக தீவகப்பகுதிகளிலும், அகதிகள் செறிந்து வாழும் பகுதிகளிலுமே டெங்குக்காய்ச்சல். மலேரியா போன்ற தொற்று நோய்கள் வெகுவாகப் பரவி வருகின்றதாகவும் அவர் குறிப்பிட்டார்

இவ்வாறான நோய்கள் ஓரளவு குறைந்துக் கொள்ளலாம் எனவும் சுகாதார வட்டாரங்கள் தெரிவித்தன. ப11

## கருத்தரங்கு ஒத்திவைப்பு

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்க உடுப்பிட்டி பருத்தித்துறைக் கிளைகளால் நாளை 28 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை அல்வாய் இன்னாசித்தம்பி வித்தியாலயத்தில் நடைபெற விருந்த கல்வி நிர்வாகச்சேவை வகுப்பு III போட்டிப் பரீட்சைக்கான

## பொதுக் கூட்டம்

யாழ் மாவட்ட கிராம அ. ச. சமாசத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம் நாளை 28 ஆம் திகதி ஞாயிறு 9 மணிக்கு யாழ் இந்து மகளிர் ஆரம்பப் பாடசாலையில் நடைபெறும். 71

## எலி கடித்ததற்கு நகரசபை நஷ்டஈடு

நித்திரையிலிருந்த குழந்தையின் ஒரு கண்ணை எலி கடித்துக் தின்ற சம்பவம் இங்கிலாந்தில் நடைபெற்றுள்ளது.

எலிகளை அழிக்க நடவடிக்கை எடுக்கத் தவறியமைக்காக வேல்ஸ் நகரசபை குழந்தையின் பெற்றோருக்கு 92300 டொலர் நஷ்டஈடாக கட்ட வேண்டுமென நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

## நுவரெலியாப்பகுதியிலும் சிங்களத்தில் சுற்றுநிருபம்

நுவரெலியா, கோட்டக் கல்வி காரியாலத்திலிருந்து தமிழ் பாடசாலைகளுக்கு அனுப்பப்படும் சகல சுற்றறிக்கைகளும் தனிச் சிங்களத்தி

கோட்டக் கல்விக் காரியாலயத்தில் தமிழ்த் தட்டச்சு இயந்திரம் ஒன்றுகூட இல்லை என்று கூறப்படுகின்றது.

நெறியின் தொடக்க விழா 1991. 05. 01 புதன்கிழமை முற்பகல் 8.00 மணிக்கு யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்துக் கைலாசபதி கலையரங்கில் நடைபெறும்.

பதிவாளர்

25. 04. 91

04128

## விஞ்ஞான பீட பரீட்சைகள்

ஏற்கனவே அறிவிக்கப்பட்ட கால அட்டவணையின்படி விஞ்ஞான பீட முதலாம் அரை ஆண்டுப் பரீட்சைகள் எதிர்வரும் திங்கட்கிழமை 91.4.29 ஆம் திகதி முதல் வருட பரீட்சையுடன் ஆரம்பமாகி மற்றைய வருட பரீட்சைகளும் தொடர்ந்து நடைபெறும். தற்போதையநாட்டு நிலைக்காக பரீட்சைகள் பின்போடப்படவில்லை. விஞ்ஞான பீட மாணவர்கள் இதனை அவதானிக்கவும்.

பதிவாளர்

04129

குறிப்பாக தீவகப்பகுதிகளிலும், அகதிகள் செறிந்து வாழும் பகுதிகளிலுமே டெங்குக்காச்சல், மலேரியா போன்ற தொற்று நோய்கள் வெகுவாகப் பரவி வருகின்றதாகவும் அவர் குறிப்பிட்டார்

இவ்வாறான நோய்கள் இனிமேலும் பரவாமல் இருக்க நோய்த்தடுப்புப் பற்றிய கருத்துக்கள், கட்டுரைகள்வெளிப்படுத்துவதன்மூலம்

### கைப்பற்றிய...

யென்பது எனக்குத் தெரியும்''.

இவ்வாறு முன்னாள் ஜனாதிபதி ஜே ஆரின் மகன் ரவி ஜயவர்த்தனா கொழும்பு பத்திரிகை ஒன்றுக்கு அளித்த பேட்டியில் கூறினார்.

''இந்திப்படை இங்கு வருவதை நான் விரும்பவில்லை சிங்களக் கிராமங்கள் அவர்களால் தாக்கப்படும் எனக் கருதினேன் என்றும் அவர் அப்பேட்டியில் கூறினார்.

### அரசு மீது...

தாக்குதலுக்குள்ளான மொனராகலை ஒக்கம்பிட்டி பகுதிக்கு சென்ற பி பி ஸி செய்தியாளரிடம் அக்கிராமவாசிகளில் ஒருவர் ''எமது அரசியல்வாதிகளுக்கு வாய்கிழிய பேச மட்டும் தெரியும் ஆனால் நாம் இங்கு உயிரிழந்து கொண்டு வருகிறோம்'' என்றாராம்.

யர் சங்க உடுப்பிட்டி பருத்தித்துறைக் கிளைகளால் நாளை 28 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை அல்வாய் இன்னாதம்பி வித்தியாலயத்தில் நடைபெற விருந்த கல்வி நிர்வாகச்சேவை வகுப்பு III போட்டிப் பரீட்சைக்கான கருத்தரங்கு வேறொரு திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இக் கருத்தரங்கிற்கான புதிய திகதிகள் விரைவில் அறிவிக்கப்படும்.

### ஊர்காவற்றுறை...

றன.

இம்மோதலில் புலிகள் தரப்பில் கார்த்திக் (இ. சந்திரகுமார் யாழ்) நாசிக் (நாகேஸ்வரகுருக்கள் மதுசூதனன் யாழ்) மனோஜ் (அ.கருணாநிதி மலையகம்) ஆகியோர் வீரமரணமடைந்தனர். (71)

### மருத்துவப்...

மருத்துவத் தொகுப்புகள் கொண்ட புத்தகங்கள் இந் நிறுவனத்தினரால் வெளியிடப்பட்டுள்ளது.

இலவச வெளியீடான இப் புத்தகத்தில் பழவகைகளும் இவற்றை உண்பதனால் அடையும் பலாபலன்களும் மற்றும் இவற்றை வைத்தியத்திற்கு உரிய நூற்றி அறுபது மருத்துவக் குறிப்புகளும் அடங்குகின்றன. 38

## பொதுக் கூட்டம்

யாழ் மாவட்ட சி. க. கூ. ச. சமாசத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம் நாளை 28 ஆம் திகதி ஞாயிறு 9 மணிக்கு யாழ் இந்து மகளிர் ஆரம்பப் பாடசாலையில் நடைபெறும் 71

### மந்திகை...

என் கதிரவேற்பிள்ளை இக் குற்றத்திற்கு 25 ரூபா தண்டம் விதித்தார். 15

### கட்டுப்பாடு...

செலுத்தினார்.

அவரின் 86 சைக்கிள் சவுக்காரங்களும் பறிமுதல் செய்யப்பட்டன. ப-5

### இராணுவ...

வீடு திரும்பிச் சென்றபோதே இச் சம்பவம் நிகழ்ந்துள்ளது.

தனிப்பட்ட விரோதமே இச் செயலுக்குக் காரணம் எனவும் கூறப்படுகிறது. (70)

### ஊரடங்கு...

பெற்றதாக தெரிவிக்கப்படுகிறது.

வினாத்தாள்களின் அடுத்த தொகுதி அடுத்தவார ஆரம்பத்தில் இங்கு வந்து சேரும் எனவும் தெரிவிக்கப்பட்டது.

இங்கு பரீட்சைகள் நடைபெறுவது குறித்து பரீட்சைப் பகுதிக்கு அறிவிக்கப்பட்டதாகவும் கல்வித் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன.

## சிங்களத்தில் சுற்றுநிருபம்

நுவரேலியா, கோட்டக் கல்வி காரியாலத்திலிருந்து தமிழ் பாடசாலைகளுக்கு அனுப்பப்படும் சகல சுற்றறிக்கைகளும் தனிச் சிங்களத்திலேயே இருக்கின்றன

பெரும்பான்மையான தமிழ்ப் பாடசாலைகளையும் தமிழ் மாணவர்களையும் கொண்டு விளங்கும் இக் கோட்டக் கல்விக் காரியாலயத்தில் தமிழ்த் தட்டச்சு இயந்திரம் ஒன்றுகூட இல்லை என்று கூறப்படுகின்றது.

தமிழ்த் தட்டச்சு இயந்திரத் தேவை குறித்து பலமுறை எடுத்துக் கூறியும் கவனத்தில் அவை எடுத்துக் கொள்ளப்படவில்லை எனத் தெரிகிறது. 38

## நல்லூர் ப. நோ. கூ. லொறி விபத்துக்குள்ளானது

நல்லூர் பல நோக்கு கூ. சங்க லொறி பொருள்களுடன் கொழும்பிலிருந்து வந்து கொண்டிருந்தபோது வவுனியா பகுதியில் விபத்துக்குள்ளானது.

இதில் பயணம் செய்த இருவர் படுகாயமடைந்து யாழ் பெரியாஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இந்த லொறி வவுனியாவில் படையினரால் தடுத்து வைக்கப்பட்டு தமது தேவைகளுக்கு பயன்படுத்தப்பட்டு பின்னர் விடுவிக்கப்பட்டது. 66

### மூன்று...

கிறது

வடக்குக் கிழக்கு நிலைமைகளால் இப்பகுதிகளிலிருந்து பெருமளவு நெல் விளைச்சல் பாதிக்கப்பட்டுள்ளதால் நாட்டின் அரிசிக்கு பற்றாக்குறை ஏற்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

### தமிழ்ப்...

திரை மறைவில் மேற்கொள்ளப்பட்டுவரும் இந் நடவடிக்கை குறித்து இந்து தமிழ்ப் பெற்றோர் கவலை கொண்டுள்ளனர்.

இப்பத்திரிகை முரசொலி பப்ளிஷேர்ஸ், (பிறைவேட்) லிமிற்றெட் நிறுவனத்தினரால் யாழ் கல்வியங்காடு டச்சு வீதி, 'லஷ்மி' பில்டிங்'இல் உள்ள அச்சகத்தில் 27-04. 1991 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.